## மாகாண வீதிகள் செயற்திட்டம் - ஊவா மாகாணம் - 2011

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டு பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மீளாய்வாண்டின் போதான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள்நிரப்புகளும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) முன்னைய ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமையால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் ஊவா மாகாணம் செலவினம் ரூபா. 1,078,043,188 ஆனதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,734,560,752 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினத்தின் பொழிப்பு பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| **செலவின விடயம்** | **2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | **2010 மார்ச் 31 இலிருந்து திசெம்பர் 31 வரையான 1 ஆவது கணக்கீட்டுக் காலத்திற்கான செலவினம்** | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| சிவில் வேலைகள் | 845,591,627 | 625,069,513 | 1,470,661,140 |
| வீதிப் பராமரிப்பு | 111,495,347 | - | 111,495,347 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 92,004 | 1,146,294 | 1,238,298 |
| அலுவலக உபகரணம் | 2,346,667 | 2,070,197 | 4,416,864 |
| ஆலோசனை சேவைகள் | 130,822,824 | 5,031,215 | 135,854,039 |
| பயிற்சி மற்றும் செயலமர்வு | 394,000 | - | 394,000 |
| அதிகரிக்கும் மற்றும் செயற்பாட்டுக் கிரயம் | 13,360,716 | 7,236,264 | 20,596,980 |

| | | | |
|---|---|---|---|
| மீள்மதிப்பும் குறை மதிப்பீடும் க/கு | (26,059,997) | 15,964,081 | (10,095,916) |
| | --------------------- | --------------------- | --------------------- |
| மொத்தம் | 1,078,043,188 | 656,517,564 | 1,734,560,752 |
| | ========= | ========= | ========= |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, செயற்திட்ட ஒருங்கிணைப்புக் கூறு, செயற்திட்ட அமுலாக்கல் கூறு- ஊவா, செயற்திட்ட அமுலாக்கல் கூறு- கிழக்கு மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் கூறு- வடக்கு மாகாணம் என்றவாறு நான்கு புறம்பான விசேட (டொலர்) கணக்குகள் திறக்கப்பட்டிருந்தன. மீளாயயய்வாண்டின் போதான ஊவா மாகாணத்தின் விசேட (டொலர்) கணக்கிற்கான செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | யூ.எல். டொலர் | ரூபா |
|---|---|---|
| 2011 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 7,640,904.21 | 847,781,245 |
| கூட்டுக: மீள்நிரப்புகள் | 8,100,667.33 | 894,298,282 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 26,059,997 |
| | -------------------- | -------------------- |
| கழி:- | 15,741,571.54 | 1,768,139,524 |
| பற்றுதல்கள் (எவ்ஏ) | 9,152,864.45 | 1,017,963,434 |
| பற்றுதல்கள் (ஆர்எவ்ஏ) | 81,528.57 | 8,999,997 |
| | -------------------- | -------------------- |
| 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 6,507,178.52 | 741,176,093 |
| | ========= | ========= |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. மீளாய்வாண்டு இறுதியளவில் அபிவிருத்தி செய்ய வேண்டிய 5 வீதிகளில் 4 வீதிகளிற்காக கால நீடிப்பு வழங்கப்பட்டது. இது 2012 மே 29 இல் மேற்கொள்ளப்பட்ட அந்த வீதியின் பௌதீக பரிசோதனையில் நிர்மாண வேலைகள் மீதான வேலைத் திட்டத்தினை பெற்றுக்கொள்ள முடியாமையால் வேலைத்திட்டன்படி முன்னேற்றத்தை பரீட்சிப்பது சாத்தியமற்றிருந்தது. குறித்த காலத்திற்குள் நிர்மாணத்தின்

பூர்த்தியாக்கல் சாத்தியம் நிச்சயமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்த வீதிகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

| வீதியின் இலக்கம் | வேலை தொடங்கிய திகதி | பூர்த்தியாக்க வேண்டிய திகதி | நீடிப்பு வழங்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | நீடிப்பின் பின்னர் பூர்த்தியாக்க வேண்டிய திகதி | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| | | | நாட்கள் | | % | % |
| யூவீஏ 01 | 2010.11.01 | 2012.10.30 | 73 | 2013.01.11 | 44.06 | 52.00 |
| யூவீஏ 02 | 2010.11.01 | 2012.11.30 | - | 2012.11.30 | 24.03 | 28.00 |
| யூவீஏ 03 | 2010.11.08 | 2012.11.06 | 23 | 2012.11.29 | 35.01 | 34.59 |
| யூவீஏ 04 | 2010.11.26 | 2012.10.26 | 41 | 2012.12.01 | 61.02 | 60.02 |
| யூவீஏ 05 | 2010.12.05 | 2012.12.05 | 25 | 2012.12.30 | 36.04 | 42.25 |

2. செயற்திட்டத்தின் செயற்பாடு தொடங்க முன்னர், குறித்த செயற்திட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்டத்தின் முழுக்காலத்தினையும் உள்ளடக்கிய வகையில் இலக்குகளிற்கான பொறுப்புக்களையும் நிர்ணயித்து மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு ரீதியாக குறிப்பிடப்பட்ட நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற விபரமான செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 7 ஆம் இணைப்பின் 29 மற்றும் 30 ஆம் பிரிவின்படி, உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் காலாண்டு அடிப்படையான அறிக்கைகள் அனுப்புவதற்குப் பதிலாக உலக வங்கி மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் உப கிளைக்கு அனுப்பப்பட வேண்டும். காலாண்டு அறிக்கை ஒரு கணக்காய்வு ஐய வினா மாத்திரம் மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் அமுலாக்கல் முகவரிற்கு அனுப்பப்பட்டிருந்ததமை அவதானிக்கப்பட்டது.

4. நிதிப் பிரமாணம் 756 இன்படி, ஆண்டின் இறுதியில் நடாத்தப்பட வேண்டிய ரூபா 5,446,579 பெறுமதியான நிலையான சொத்துக்களிற்கான மெய்மையாய்வுச் சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

5. 2010 யூலை 10 வரை சேவையாற்றியும் செயற்திட்டப் பணிப்பாளர் 2012 மே 29 வரையும் கூட அவர் பயன்படுத்திய ரூபா 197,735 பெறுமதியான உபகரணங்கள் கையளித்திருக்கவில்லை.

6. 2011 ஏப்ரல் 1 ஆந்திகதிய பிஏவைஈ/வரி/01/2011 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சுற்றறிக்கையின் படி மாதம் ஒன்றிற்கு ரூபா 50,000 இற்கு மேல் வருமானம் உழைக்கின்ற ஊழியர்களிடமிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிடப்பட்டு செலுத்தும் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2011 ஏப்ரல் முதல் ஒக்தோபர் வரையாக காலம் தொடர்பில் ரூபா 48,142 தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.